செய்தி வெளியீடு எண்:704 நாள்: 26/08/2008

# தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தேர்வுகளில் பங்குபெறும் ஊனமுற்றவர்கள் இனி தேர்வுக்கட்டணம் செலுத்தத் தேவையில்லை!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளுக்கும் தேவைப்படும் பணியாளர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகள் மூலம் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்படுகின்றனர்.

ஊனமுற்றவர்களின் நலன்களை மேம்படுத்திடவும், அவர்களின் மதிப்பைச் சமுதாயத்தில் உயர்த்திடவும், ஒரு புதிய சலுகையாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளும் ஊனமுற்றவர்களுக்கு இனித் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுமையாக விலக்களித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**